S.C.No. 95/2021 நாள் 16.04.2026 PW 2 – திருமதி.காந்திமதி

(Crl.M.P.No.14/2026 மனு அனுமதிக்கப்பட்டதன்பேரில், சாட்சி மீண்டும் நீதிமன்றத்தில் முன்னிலையானார். அவர் மீண்டும் உதவியாளரால் பிரமாணம் செய்யப்பட்டு அனுமதியின்பேரில் தொடர்ந்து குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.)

குறுக்கு விசாரணை (எதிரிதரப்பில்)

முதல்விசாரணையில் சொல்லிய விவரங்கள் அனைத்தும் காவல்துறையினர் சொல்லிக்கொடுத்ததன் அடிப்படையில்தான் சொன்னேன் என்றால் இல்லை. எனக்கும், இறந்துபோனவருக்கும் சொத்து பிரச்சனை எதுவும் இல்லை என்றால்சரிதான். சொத்து பிரச்சனையை பற்றி காவல்துறையினர் விசாரித்தார்களா என்றால் இல்லை. எனக்கு எழுத படிக்க தெரியுமா என்றால் தெரியும். நான் ஏன் சென்று காவல்துறையில் புகார் கொடுக்க செல்லவில்லை என்றால் எனது கணவர் சென்று புகார் கொடுத்தார், நான் வீட்டில் குழந்தைகளை பார்க்க வேண்டியதிருந்ததால் அவர் சென்றார். சம்பவம் நடந்ததாக சொல்லக்கூடிய நாளில் நான் ஊரில் இல்லை என்று சொன்னால் சரியல்ல. ஆஜர் எதிரியை தெரியுமா என்றால் தெரியும். ஆஜர் எதிரி சம்பவ சமயத்தில் ஊரில் இல்லை என்றால் சரியல்ல. சம்பவம் நடந்ததாக சொல்லக்கூடிய இடத்தில் கேமரா இருந்தது என்றால் இல்லை. சம்பவத்தை நேரில் பார்த்ததாக சொல்வது வழக்கில் மாட்டிக்கொள்ளக்கூடாது என்று கூறுகிறேன் என்றால் சரியல்ல. புகார் கொடுக்கும்போது எனது கணவர் சொல்லிவிட்டுதான் சென்றாரா என்றால் சொல்லிவிட்டுதான் சென்றார். நான் பக்கத்து வீட்டுக்காரர் என்பதால் வழக்கில் நாங்கள் மாட்டிக்கொள்ளக்கூடாது என்பதற்காக நானே புகார்கொடுத்து சாட்சியாக உள்ளேன் என்றால் சரியல்ல. ஒருவர் இறக்கும் நிலையில் இருந்தபொழுது நான் ஏன் எந்த உதவியும் செய்யவில்லை

என்றால் குடும்ப உறுப்பினர்கள் அனைவரும் இறந்தவருடன் இருந்ததால் நாங்கள் உதவிக்கு செல்லவில்லை. சம்பவத்தை பார்த்ததாக சொல்வது நம்பகத்தன்மையுடன் இல்லை என்றுசொன்னால் சரியல்ல. நான் பார்த்ததாக சொல்லும் நேரத்தில் எந்தவித சம்பவமும் நடைபெறவில்லை என்றுசொன்னால் சரியல்ல. நான் பார்க்காத நேரத்தில்தான் கொலை சம்பவம் அரங்கேறியது என்றுசொன்னால் சரியல்ல. வழக்கிற்காக பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>மறுவிசாரணை இல்லை.</u>

Taken down before me in open court, in the presence of the Accused read over to the witness and admitted by the deponent to be correct

II Additional District& Sessions Judge,
Thoothukudi.